சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ௵ (1889-ம் ஆவணி ௴ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

புத் - 94 ] யாழ்ப்பாணம் :- துந்துபி ௵, தை ௴ 14, 21-1-1983 வெள்ளிக்கிழமை [இல - 14

## தமிழ் இனப் பண்பாட்டின் தரணி போற்றும் தனிப்பெரும் பண்பு

# பசு இனப் பாதுகாப்புப் பணி

## மிருக வதை விலக்குதலே மேலான தொண்டு

சுதந்திர தினக் கொண்டாட்டங்களின்போது மிருகங்களை ஊனுக்காகக் கொலை செய்வதை நிறுத்த ஒழுங்குகளை அரசாங்கம் எடுக்கின்ற நன் முயற்சியை எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்வர். சைவசமயத்தின் தலை சிறந்த கோட்பாடு கொல்லாமை, இது ஒரு விரதம். புத்த மதத்தினரும் ஓரளவுக்கு மிருக பலியை விலக்கி வருகின்றனரெனினும் சைவமதநெறியின் ஆணித்தரமான கொள்கையாக அதனைக் கொள்வதில்லை.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பசுப் பாதுகாப்புக்காகச் சைவ மக்கள் அரசாங்கத்திடம் ஓர் வேண்டுகோளை விடுப்பது நன்று. பசுவதை மகா பாதகம் என்பதைப் பாடப் புத்தகங்களிலே எல்லா மொழிகளிலும் எடுத்தாண்டு பள்ளிக்கூடத்திலே பாலர்கள் முதலாக வாலிப வயதுடையவர் வரை பசுவதையை ஒருபொழுதும் ஆதரிக்காதவர்களாக வாழ வழிநடத்த வகை செய்வதற்கிதுவுகந்ததொரு வழியாகும்.

—

### மாவைக் கந்தனுக்கு மகத்தான இலட்சார்ச்சனை

துந்துபி தை 6 ம் நாள் (19 - 1 - 83) தொடக்கம் தை 15 ம் நாள் (28-1-83) வரைக்கும் வழமைபோல வளமாக மாவைக் கந்தனுக்கு இலட்சார்ச்சனை நிகழ ஆதின கர்த்தா மஹா ராஜ ஸ்ரீ ச. து. ஷண்முகநாதக் குருக்கள் எல்லா ஒழுங்குகளையும் செய்திருக்கின்றனர். பண்ணிசை, திருப்புகழ் அஞ்சலி, கலைக்கவின் நாத இன்பம் ஆகும் பலவேறு பத்திக்குரிய அரிய நிகழ்ச்சிகள் விசேடமாக இடம் பெறுகின்றன. — —

### மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## பெருந் திருவிழாக்கள் 1983

மேஷ் ஆலய வருடாந்த மகோற்ஸவங்கள் எதிர்வரும் 8-2-83 இலிருந்து பத்தொன்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. வழமைபோல தேர்த்தினத்தன்று இரவு பஞ்சரத பவனியும் சிறப்புற நிகழவுள்ளது.

## கந்தபுராண படன பூர்த்தி விழா

### புராணபடன வித்தகருக்கு பொன்னாடையும் பொற்கிழியும்

( சித்தாந்த சிரோமணி திரு. மு. மயில்வாகனம் )

சென்ற வருடம் தைப்பூசத்தினத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரது நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட கந்தபுராண படன பூர்த்தி விழா சென்ற 18-1-83 புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு 5 மணிக்கும் இடையில் நடைபெற்றது. சிவபெருமானுக்கும் திருமுறைகளுக்கும் பூசை நடைபெற்றபின்னர் புராண பூர்த்திப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது. புராண படன வித்தகர் திரு. சி. தம்பிஐயா உரையாசிரியராக அமர்ந்து புராண படனத்தைப் பூர்த்தி செய்தார். சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை வட்டுக்கோட்டை திரு. முருகபிள்ளை திரு. இ. சம்பந்தநாதன். சித்தாந்த வித்தகர் திரு. சே. க. சண்முகம்பிள்ளை ஆகியோர் பங்குபற்றினர். ஈற்றில் பூசை நடாத்தப் பெற்று பிரசாதம் வழங்கப்பட்டது. சபைத் தலைவர் திரு. சி. இராசேந்திரம் J. P. அவர்கள் புராண படன வித்தகர் திரு. சி. தம்பிஐயா அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்திப் பொற்கிழி வழங்கி கௌரவித்தனர் திரு. தம்பிஐயா அவர்கள்தமது நன்றியுரையிற் சிதைதலை நினைந்து முற்றிச் சிவகதி அடைவிக்கும் கந்த புராணபடனத்தை எமது சபை பல வருடங்களாக நடத்தி வருகின்றது. என்றும இந்தச் சூழலில வதியும் சைவமக்கள் புராணபடனத்திற் பங்குபற்றிப்பயனெய்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார் புராணபடனத்தில் பங்கு பற்றியோர் அனைவருக்கும் பாராட்டுத் தெரிவித்தார். ——

### அன்பின் திருவுருவாய 'ஆத்மீக மேதாவி' அமெரிக்க

# சிவாய. சுப்பிரமுன்ய சுவாமிகள்

## மல்லைப் பழம்பதியில் வணங்கி விபூதி அணிந்தனர்

சிவனடியார் திருக்கூட்டத் தேசு பொலிய 'ஓம் சிவ குருநாதா' என்று உச்சரித்தவண்ணம் தவத்திரு சிவாய. சுப்பிரமுன்ய சுவாமிகளும் சீடர்களும் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 4 - 30 மணியளவில். மல்லைப் பழம்பதியில் பழம் பிள்ளையார் தரிசனம் செய்தபொழுது விசேட கற்பூர அலங்காரப் பூசை நிகழ்ந்தது.

சுவாமிகளுக்குக் கோயில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ முத்தையாக் குருக்களாகேந்திரசர்மாவும், சிவஸ்ரீ மணிவண்ணக் குருக்களும சிவஸ்ரீ சண்முகசுந்தர சர்மாவும், விபூதிப் பிரசாதம் காளாஞ்சி முதலியன வழங்கி வணங்கி உபசரித்தனர். பெருந் திரளான அடியார்கள் இந்த வைபவத்தில் மிக அமைதியாகச் சுவாமி தரிசனமும் சுவாமிகள் தரிசனமும் செறியாக நிகழ்த்தினர்.

சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் பழம்பதியின் வரலாற்றைச் சுருக்கமாக ஆங்கிலத்திற் கூறி சுவாமிகளுக்கு வணக்கஞ் செலுத்தினர்.

சுவாமிகள் ஆசீர்வாத உரையாகச் சைவ சமயிகளின் கடமைகளைப் பற்றிச் சொல்லி எல்லோரும சமயிகளாக வாழவேண்டும என்றும் 'அன்பே சிவம்' என்ற அருள்மொழியை மந்திரமாகக் கொள்ளுதல் வேண்டும் என்ற நற்மொழி பகர்ந்து 'ஓம் சிவகுருநாதா ..... .....' என்ற தொடக்கத்துடன சிவ நாமஞ் செபித்தனர்,

பழம்பதியிலிருந்து திருக்கோயில் உபசார அலங்காரங்களுடன் சுவாமிக

வளர்ச்சி 2 ம் பக்கம்

### 'கலாநிதிக்கு' நாளை பாராட்டு விழா

பிரம்மஸ்ரீ கலாநிதி ப. கோபால கிருஷ்ண சர்மா (விரிவுரையாளர், யாழ்ப்பாணம், உப தலைவர் சிவானந்தகுருகுலம்) இலங்கைப் பல்கலைக் கழகத்தால் 'கலாநிதி' மட்டம வழங்கியதைப் பாராட்டிக் கௌரவிக்குமுகமாக யாழ். சிவானந்த குருகுல பரிபாலன சபையினரால் மேஷ் குருகுல மண்டபத்தில் 22-1-83 சனிக்கிழமை மாலை 3 மணி முதல்நடைபெறும், சிவஸ்ரீ ச. இராஜேந்திரக்குருக்கள் (தலைவர், சிவானந்த குருகுலம்) தலைமையில்நிகழும். நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் (விரிவுரையாளர் யாழ்வளாகம்) ஆகியோர் சிறப்புரை யாற்றுவார்கள்.

## பசுக்காத்தலும் பட்டிப் பொங்கலும்

(பௌராணிகவித்தகர் வ. குகசர்மா, தெல்லியூர் )

பசுக்கள் மனிதருக்குச் சத்துள்ள பாலைத்தருவன, அதிலிருந்து தயிர், நெய், முதலிய உணவுப் பொருட்களைப் பெறுகின்றோம். பசுக்கள் பயிருக்கு வேண்டிய பசளையே தருவன. பயிர் வளர்தற்கு மழைக்கு அடுத்தாகப் பசளையே உதவுகிறது. பசுதரும் இடபக் கன்றுகள் வயலை உழுகின்றன. மக்களுக்கு உதவியாக அவர்களின்பொருள்களை வண்டி இழுப்பதன் மூலம் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்கின்றன. இவ்வாறு பயிர் வளம் பெருக, மக்கள் இன்பமும் பெலமும் பெற்று வாழப் பசுவினங்கள் உதவுகின்றன.

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

துந்துபி ஞு தை மீ
14, 21-1-1983 வெள்ளி

# காவாய்த் தீவில் ஓர் கலங்கரை விளக்கம்

•••○•••

கலங் கரையைப் பாதுகாப்பாகச் சேர்வதற்குத் துணைசெய்வது உயர்பீடத்தில் ஒளிபெருக்கும் விளக்கம்; வாழ்க்கையென்னும் பெருவாரியில் மிதந்து செல்லும் மானிட நாவாய்களுக்கெல்லாம் கரையேறக் கைதந்து உதவுங் கடவுள் அதற்குரிய சாதனங்களையும் அவற்றை தெரிப்படுத்தும் ஆசார்களையும் அப்பணியில் ஈடுபடச் செய்த வண்ணம் கருணை பொழிகின்றார்.

சைவமாஞ் சமயஞ்சார்ந்தவர்கள் பாரத தேசத்திலும் ஈழமணி நாட்டிலும் மட்டுமல்ல அகிலத்திலும் ஆங்காங்கிருக்கின்றனர்; இவ்வாறு பரந்த நிலப்பரப்பிலே சற்சமய நெறியிற் புகும் பூர்வபுண்ணியம் படைத்தவர்களுக்கெல்லாம் ஓர் கலங்கரை விளக்கமாகப் பசுபிக் மகா சமுத்திர நாட்பண்ணுக அமைந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான சின்னஞ்சிறு தீவுகளின் மத்தியிற் காவாய் என்ற கனிவான நாமம் பூண்ட தீபகம் உண்டு.

கருணைக் கடவுளைக் காணும் அவாவினையுடையார் யாவரும் எம்மைக் காவாய் காவாய் என்று கசிந்துருகிக் கதறும் எதிரொலி போல ஒலிக்கும் பெயர்பூண்ட இந்தப் புண்ணிய மண்ணிற் கடவுளுக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டிருக்கின்றதென்றால் அத் தெய்வம் முத்தியின்பம் வேண்டி முயல்வோருக்கு ஒரு கலங்கரை விளக்கம் ஆம், என்றே சொல்ல வேண்டும்.

இந்தக் கலங்கரை விளக்கத்தை இயக்கும் பேறு பெற்றவர். எங்கள் நாட்டில் எல்லோருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கிய சிவயோக செம்மல் யோகர் சுவாமிகளின் சீடர் என்றால் அந்த விளக்கம் அந்தகாரம் போக்கும் ஆற்றலை இயல்பாகப் படைத்திருக்கின்றதென்று சொல்லவும் வேண்டுமோ?

சிவாய சுப்பிரமுனிய சுவாமி என்னும் இந்தக் கலங்கரை விளக்க இயக்குநர் எப்படி இறை ஒளி பரப்புகின்றார் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

ஓயாமற் சிவகாமம் ஓதிய அண்ணல் சைவநெறி ஒழுக்க முறையை வழுவாது கடைப்பிடித்துச் சைவ வேடப் பொலிவிலே திருக்கோலச் செம்மையை விளக்கி நிற்கும் இந்த மேனாட்டு மேதையின் மேனி செம்மேனி எம்மானைச் சிந்திக்க வைக்கின்றது. வெண்ணீற்றின் வெண்மைக்கு வண்ணம் விளக்குவார்போன்று திருப் பொலிய வீற்றிருக்கும் சுவாமிகள் சொல்வதெல்லாம் நலனவே.

சைவமே தலைசிறந்த சமயம், அதன் தெய்வம் சிவனே அவனை அடைய அன்பு நெறி வேண்டும் அன்புள்ளம்பெற மன்னுயிரைக் காத்தல் எனும் அறம் பேண வேண்டும் அறம் பேணவெனின் கொல்லா விரதம் குடிசைப்பின் நிலவ வேண்டும்.

இவ்வளவுண்மையையும் செவ்வனே எடுத்துரைத்து அவ்வழி தானும் தனடியார்களும் ஒழுக வழிகாட்டும் ஒருவர் காவாய்க் கலங்கரை விளக்கத்தை இயக்குனர் ஆகும் தொண்டினை ஆற்றுதற்கு முற்றிலும் பொருத்தமானவர் அன்றோ!

நாவலர் இந்நாட்டில் இயங்கிய கலங்கரை விளக்கம்; காவாயில் இஞ்ஞான்று இயங்கும் கலங்கரை விளக்கம் யோகசுவாமி சீடரும் சிவாய சுப்பிரமுனிய சுவாமி.

சுவாமி சொல்வதைச் சிந்திப்போம் கலங்கரை விளக்கத்தின் கருணையோடு முத்திக் கரை சேர முயற்சிப்போம். ——

சிவநெறி செறிந்த சைவத்திருவாளர்
சித்தாந்த வித்தகர்

# கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார்

சமயப்பணியில்அமைந்து தான் பெற்ற இன்பம் தரணி பெறச் சித்தாந்தச் சொற்பொழிவுகளும் புராணப்பேருரைகளும் தமிழகத்திலும் ஈழத்திலும் பல காலும் பணிவன்புடன் ஆற்றிப்பரன்பணியில்முனைந்து நின்ற சிவநெறியாளர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தமது எண்பத்தாறும் ஆண்டு சிவகதியடைந்து விட்டனர்.

பன்னிரு திருமுறைகளையும் முப்பெரும் புராணங்களையும் சென்னிமீது வைத்துச் சிவசிந்தனை செய்து வந்த செட்டியார் பெரியார் சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடி வணங்கிய வண்ணம் செழுந்தேனன்ன தீந்தமிழ்ச் சுவைத் திருத்தொண்டர் புராணம் திருவாய் மலர்ந்த சேக்கிழார் சுவாமிகளைப் போற்றிப் புகழ்ந்தபொழுதெல்லாம் புண்ணிய வசத்தால் சுவாமிகளின் திருவுருவப் பிரதிட்டைகளைச் சென்னையிற் பலவேறு தலங்களிலும் செய்து உள்ளம் உவகை கொண்டு வாழ்ந்தனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சைவ மகாநாட்டிலே தலைமை தாங்கி அரும்பொருள் விரிவுரை ஆற்றியதோடமையாது நால்வர் கோயில் திருவக் கால்கோள் இயக்கிச சபைச் சமயப் பிரசார அமைப்பாளர் மு. மயில்வாகனம் அவர்களுக்குப் பெருந் துணை புரிந்தவர்.

பன்னிரு திருமுறைகளைப் பன்முறை பாராயணம் பண்ணிய பெருவாழ்க்கைப் பயன் அடைந்த செட்டியார் சிலர் பன்னிரு திருமுறைக் கோயில்களையும் பல்வேறிடங்களில் நிறுவிச் சமய குரவர் வழிபாட்டில் நின்ற சால்புடையவர்.

நாயன்மார்கள் நால்வர் வரலாற்றுச் சுருக்கங்களுடன் திருமுறைத் தொகுப்புகளும் வெளியிட்ட செட்டியார் வித்தகர் சிவாலய வழிபாட்டு விளக்கம் ஒன்றும் இயற்றியுதவினர்.

சைவபரிபாலன சபையின் எழுச்சியின் பெரிதும் விருப்பி வேண்டியாங்கு தொண்டாற்றிய செட்டியார் பெரியாரை ஈழம் வாழும் சைவ அன்பர்கள் என்றும் மறவாது வாழ்த்துச் சொற்பெருகிப் பணி புரிந்தமையை ஈண்டு எண்ணுவது பொருத்தமாகும்.

சிவநெறிப் புரவலர் க. கனகராசா அவர்கள் இச் சைவசித்தாந்த வித்தகர் இயற்றிய வெளியீடுகளைப் பயன்பெறவெளியிடும் பாக்கியம் பெற்றவர்களுள் ஒருவராவர்.

மன்மத பங்குனிப் பரணியில் இந்நிலத்திற்றோன்றிய இவர் துந்துபி மார்கழித் திங்கள் பூரம் பூசத்தன்று மன்னவன் மாணடி வைகினர்.

சாந்தி. சாந்தி. சாந்தி.

# அன்பின் திருவுரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் சீடர்களும் அடியார்களும் மங்கல வாத்தியம் முழங்க மகர தோரணம் இருமருங்கும் அழகுசெயும் வீதி வழியே ஊர்வலமாக ஏழாலை மகாவித்தியாலயத்தில் நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த ஒழுங்கினை மல்லாகம் இந்து இளைஞர் சங்கத்தினர் நனியமைத்தனர்.

பாதயாத்திரையாகப் பத்தபவன் பழங்கோயிலிலிருந்து சுவாமிகள் அடியார்களுக்குத் தரிசனம் கொடுத்தவண்ணம் சென்றனர். அடியார்கள் பூரண கும்பம் வைத்து மலர்மாலை சூடி மகிழ்ச்சி மலரச் சுவாமிகளை வணங்கியுபசரித்தனர்.

ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடந்த வரவேற்பில் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் உபசாரப் பத்திரம் வாசித்து வழங்கினர்.

நல்லை ஆதீனம் மகாசந்நிதானமும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும்சுவாமிகளின் தொண்டின் தாய்மையை எடுத்துரைத்தனர்.

சைவ அபிவிருத்திச் சங்கப் பரிசளிப்பும் நிகழ்ந்தது. திரு. சி. சக்திகிரீவன சபையின் சீரிய பணிகளை விளக்கிக் கூறினர்.

==

நேயர்கள் நெஞ்சம்

## பாடசாலைப் பெயர் மாற்றத்தில்

# ஒரு பண்பு வேண்டும்

யாழ். மாவட்டத்திலே உள்ள பாடசாலைகளில் அநேகம் கிறிஸ்தவ இயக்கங்களால் ஆரம்பிக்கப்பட்டவை. இந் நாட்டுச் சைவ மக்களை கிறிஸ்தவராக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட கிறிஸ்தவ இயக்கங்கள் மேனாடுகளில் கல்வித்துறையிலே தாம் பெற்ற தொழில் நுட்ப அறிவைப் பயன் படுத்தி இந்நாட்டிலும் தாம் கல்விப்பணி செய்ய விரும்புவதாக மக்களிடம் தெரிவித்தார்கள். கல்வித்தாகமுள்ள சைவப்பெரியார்கள் பலர் பாதிரிமாரின் ஆசைவார்த்தைகளை நம்பி, பாடசாலைகள் அமைப்பதற்கு நிலமும் பொருளும் கொடுத்துதவினுர்கள். இவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகள் காலகதியில் மதமாற்றக் காரியாலயமாக மாறியதும் இவற்றில் உத்தியோகம் பார்க்கச் சென்ற ஆசான்கள் பாதிரிமாரின் கையாட்களாகியதோடு தாமும் மதம்மாறி மாணவரின் மதமாற்றத்திலும் ஈடுபட்டதை நாம் எல்லாரும் அறிவோம். அடுத்தடுத்து வந்த ஏகாதிபத்திய அரசுகள் கிறிஸ்தவ இயக்கங்களுக்கு உறுதுணையாக இருந்தபடியாலே தமது எதிரிகளைச் சமாளிக்கக் கூடியதாயிருந்தனர்.

400 ஆண்டுகள் கடந்துவிட்டன பாடசாலைகள் அரசுடைமையாயின அந்நியர் ஆதிக்கமும் அகன்று போனது.

இன்று இப்பாடசாலைகளில் அநேகம் சைவப் பாடசாலைகளாக மாறிவிட்டன. அவை சைவப் பிள்ளைகள், சைவ ஆசிரியர், சைவ அதிபர், சைவ உத்தியோகத்தர், சைவப் பராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் செல்வாக்கில் உள்ளன. இருந்தும் இப்பாடசாலைகள் தொடர்ந்து வழங்கற்ற பழைய பெயர்களால் வழங்கப்படுவது சைவ சமயத்தவரின் தன்மானத்துக்குச் சவாலாக உள்ளது. அமெரிக்கன் மிஷன் பாடசாலை, உரோமன் கத்தோலிக்க பாடசாலை, கிறிஸ்தவ புனிதர்களின் பெயர்கள், போன்ற பெயர்கள் மாற்றப்படாமலே இருந்துவருகின்றன. இன்று நமது சைவப்பிள்ளைகள் எல்லாரும் சைவப் பள்ளிகளிலே படிக்கிறார்கள். ஆனால் ஒரு சைவ மாணவன் நான் கிறிஸ்தவக்கல்லூரியிற் படிக்கிறேன் என்று சொல்ல வேண்டிய நிலை இன்று இருக்கிறது. கிறிஸ்தவ இயக்கத்தின் கருணை இருக்கிறது கிறிஸ்தவஇயக்கத்தின் கருணையாலேதான் இம்மாணவன் கல்வி கற்கிறான் என்னும் கருத்து ஏற்படுகிறது.

அதே வேளை ஏனைச்சமயப்பிள்ளைகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாடசாலைகளை எடுத்துக் கொள்வோம். முஸ்லிம் மாணவர் கற்கும் எல்லாப் பாடசாலைகளும் முஸ்லிம் என்னும் சமயப் பெயரால் அல்லது சமயப் புனிதரின் பெயரால் வழங்கப்படுகின்றன, இவ்வாறே கத்தோலிக்க கிறிஸ்தவ பிள்ளைகள் பெரும்பான்மையாகவுள்ள பாடசாலைகளும் அவர்களின் சமயப் பெயரைக் கொண்டனவாக உள்ளன.

பொதுவான பெயர்களைக் கொண்ட பாடசாலைகள் பல உள்ளன அதாவது அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மகாவித்தியாலயம, மத்திய மகாவித்தியாலயம இப்பொதுப் பெயர்களை கொண்ட பாடசாலைகள் அனைத்தும் சைவப்பாடசாலைகளாகும் அவற்றுள் ஒன்று கூட பிறமதப் பாடசாலைகளாக இல்லை. கிறிஸ்தவ இயக்கங்கள் தமது பிள்ளைகள் கற்கும பாடசாலைகள் அனைத்துக்கும் கிறிஸ்தவ பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கும். அதேவேளை சைவப்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்கும் கிறிஸ்தவ பெயரே இருக்கவேண்டும் என்பதில மிக அக்கறை காட்டி வருவதோடு அதுதவிரும் சைவப் பெயர் வராமல் பொதுப் பெயராக்குவதில வெற்றி கண்டிருக்கிறார்கள். அப்படியான ஒரு நிலை வரும் பொழுது, சிறுபான்மையரின உரிமை பற்றி நிறையப் பேசுகிறார்கள்.

ஆனாலோ தாங்கள் இதுவரைகாலமும் சைவப்பிள்ளைகளைக் கொண்ட பாடசாலைகளையெல்லாம் கிறிஸ்தவ பாடசாலைகள் என்று பெயர் சூட்டி வந்திருக்கிறார்கள் அது நீதியானது என்று தான் சொல்லுகிறார்கள்.

எனவே சைவ சமயப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்பதற்கு வழி சமைக்கப்பட வேண்டும். அரசாங்கம் பொதுவான ஒரு நிலையைக் கடைப் பிடித்து சைவ சமயப் பிள்ளைகள் பெரும்பான்மையாக உள்ள பாடசாலைகள் அனைத்தையும் சைவப்பாடசாலைகள் என மாற்றுவதற்கு ஏற்ற சட்ட திட்டங்கள் விரைவில் வகுத்துத் தரவேண்டும் என்பது சைவ மக்களின் விருப்பமாகும்.

க. மகேசன்
பொதுச் செயலாளர்.

சைவ நெறித் தொண்டர்கழகம்
இலங்கை, 15-11-82.

# HINDU ORGAN

Fri. 14, 21-1-83

## MASSACRE OF THE INNOCENTS

In this issue of the Hindu Organ there are several quotations from the weighty utterances of religious leaders and social workers referring to the cause of the cow and the need for the protection of this sacred animal

Butchering animals for food has become a universal outrage; so much so, no one seems to be worried about this outrageous act. Fattening our flesh by consuming the meat of animals is a crime of the most serious degree, as far as Saivaism is concerned. But other Faiths also by implication of the theory of Love seem to discourage the slaughter of animals for food.

Now that the Government has taken steps to impose a ban on the slaughter of cows during the week of February Four, shall we not make a definite move to urge on the Authorities to take steps to introduce legislation for the prohibition of the killing of cows

Though Saiva religious culture would wish for a total ban on the slaughter of animals, yet to make a preliminary effort, we would restrict our request to the ban on the killing of cows.

This country is essentially an agricultural land. Hence the need for the preservation of cattle must be treated as a national demand. Raising cattle is such a noble act that its protection and preservation must necessarily follow.

From the point of view of Religion, the cause of the cow calls for immediate action. A campaign to protect cows, therefore must be regarded as a national cause. A week for the cows' welfare may be declared by joint action of all religionists so that the campaign for the protection of cow may gather momentum step by step.

## Sincere Portrayal of SAIVAISM

Holiness has been the significant aspect of a dedicated band of devout Saivaites who arrived recently in Sri Lanka headed by Swami Subramuniya. Ceremoniously attired in saffron coloured robes these Pilgrims from the Pacific Islands as messengers from the Saiva Siddantha Church under the inspiring leadership of the Maha Sannithanam of Kauai bring to the home-land of Saiva Siddantham the fruits of their Study of this most ancient Religion

That their very first item of the itinerary in the Northern Peninsula was the solemn prayer of homage to the memory of their Guru at the Columbuturai Ashram would be instructive to all religious minded persons.

In a crowded program in response to calls of ardent Saiva organizations, Swami Subramuniya, during the week long pilgrimage in Jaffna, was really giving lessons on the science of spiritual practices.

The Alaveddy Ashramam and the Siva Linga Shrine in close proximity make the entire venue a sacred area where everything is holy and nothing distracting

What this Saiva Siddantha Church has hitherto achieved can be seen in the number of shrines consecrated all over America and the Pacific Islands where devotees have become accustomed to the singing of the Holy Thirumurais and the chanting of Sivanamam.

The worship of Ganapathy has become a regular spiritual exercise as much as Prayers to Paramasivam. The Himalayan Academy provides a bountiful of Bookshelf catering for the spiritual needs of seekers after TRUTH

Maha Sivarathiri, Skantha Shasti, Shivarathiri, Nawarathiri, Vinayaga Shasdi — these special days of sustained fasts are in vogue more in the area served by the Saiva Siddantha Church than anywhere else and how blessed are we to have the Dharsan of such a sincere Saivite, a gifted Teacher — Swami Subramuniya.

## World Council for HINDU AFFAIRS

An International Council or Association for rendering service to the cause of Hindu religion, culture, affairs, Hindu Dharma, generally could be of great benefit - such an Association could, at the same time, enable Hinduism and Hindus to contribute to the common welfare of all creation. It would be in consonance with the spirit of the Sanathana Dharma — The Religion Eternal — The world is getting closer in some ways and may be unconsciously trying to drift apart also at the same time — To meet the requirements of the present and the future an association like the one suggested could prove to be of fruitful value. The idea underlying this submission is sought to be placed before the Public for gracious consideration. The objects of such an organization and the title thereto may need amendments and enlargement. The humble proposal is now respectfully made as a preliminary step to obtain the blessings of all concerned for the creation of such an organisation or association or society by whatever name is deemed suitable.

*(Sri S. Sivasubramaniam)*
Life Member,
Jaffna Saiva Paripalana Sabhai

## Thoughts of A Great Thinker

*(Said Gandhiji that he was a Sanatani Hindu)*

Because,

1 I believe in the Vedas, the Upanishads, the Puranas and all that goes by the name of Hindu Scriptures and therefore in Avatars and rebirth.

2 I believe in the Varnashrama Dharma in a sense, in my opinion strictly Vedic, but not in its present popular and crude sense.

3 I believe in the protection of the Cow in its much larger sense than the popular

I do not disbelieve in Idol worship

That which distinguishes Hinduism from every other religion is its Cow protection, more than its Varnashrama.

## GNANAPRAKASA MUNIVAR

*(By V. N. Sivarajah B. A. Senior Asst. Secy. Finance & Planning Ministry)*

Navalar has been academically dealt with by historians, even though much more remains to be done; but not so a similar personality of the Portuguese period namely, Gnanaprakasa Munivar; among the reasons are the non-availability of adequate historical evidence regarding this revivalist of the Portuguese era as compared to the revivalist of the British period, namely SrilaSri Arumuga Navalar. Mr. K. M. de Silva states in his 'A History of Sri Lanka'-1981 that 'we have very little information on the Portuguese in the Jaffna Kingdom....'

The tank at Chithambaram, the city of the cosmic dance, in Tamil Nadu named after the Portuguese period revivalist and called the 'Gnanapragasar Kulam' and the statues in that locality (the two photographs appear in the Hindu Affairs Department Publication on Sivarathiri) furnish interesting information regarding certain aspects of the impact of Portuguese rule and social history of that period. The Annamalai University, in its Silver Jubilee Souvenir (1955) page (132) has published the following facts concerning Gnanapragasa Munivar, the Saiva revivalist of the Portuguese period:-

The services of certain Saiva revivalist from Ceylon have been significant. It is nearly 320 years since Gnanaprakasar, a Saiva Velala of Jaffna came to Chidambaram after initially escaping out of the Island to escape the inquisitorial exaction of a cow for slaughter from each of the Saiva families, by the then Portuguese rulers He established himself here, in the site of the present Jaffnese Colony in the eastern portion of the town. A number of families soon joined him and the colony grew. Gnanaprakasar was learned, devout and commanded the respect of the people. Sometime, a Vaisya merchant whose large wealth was stolen away, approached him to recover the lost treasure through his mystic powers and he agreed to help him Gnanaprakasar got the clue through his Upasana and with the wealth given by the merchant, the Gnanaprakasar tank was excavated. It is an extensive tank, formally surrounded by a number of mutts and houses Only a few of them now remain, and the eastern most part of it is the shrine of St. Sekkizhar, from here, Gnanaprakasar travelled widely, took to holy orders at the Thiruvannamalai Atheenam, and brought out a number of works on Saiva philosophy in Sanskrit and in Tamil. Of these, his commentary on Sivagnana Siddhiar is one. He has a mutt by the name, Sivapuri Matam, near about Sekkizhar's Shrine wherein there is his statue in a sitting posture installed by his followers.

In the nineteenth century, and within comparatively recent times, another revivalist appeared, Arumuga Navalar (A. D. 1823-1179) of the family of Gnanaprakasar

Some of the factors leading to the revival of interest about this personality who embodied in him the basic tenets of Saivaism and the Hindu social religious ethics could be identified and they are interesting as the strands of the cow

( to be continued )

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna. (Telephone No. 22336) on Friday, 14, 21-1-83*
Editor in Chief:
R. N. Sivaprakasam

